55. சாங்கிய தத்துவத்தின்படி உயிருடன் நேரடித் தொடர்புடையது

(A) மனம் (B) புத்தி

(C) அகங்காரம் (D) ஒளி

56. கீழ்க்கண்ட யோக படிநிலைகளில் முறையானவை எவை?

(A) சாதனாபாதம், விபூதிபாதம், கைவல்யபாதம், சமாதிபாதம்

(B) சமாதிபாதம், சாதனாபாதம், விபூதிபாதம், கைவல்யபாதம்

(C) விபூதிபாதம், கைவல்யப்பாதம், சமாதிபாதம், சாதனாபாதம்

(D) கைவல்யப்பாதம், சமாதிபாதம், சாதனாபாதம், விபூதிபாதம்

57. அஷ்டாங்க யோகத்தில் புலன்களைக் கட்டுப்படுத்தும் பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) இயமம் (B) நியமம்

(C) பிரத்தியகாரம் (D) தாரணம்

58. யோகத்தின் அந்தரங்க சாதனங்களாக இருப்பவை

(A) இயமம், நியமம், ஆசனம்

(B) நியமம், ஆசனம், பிராணயமம்

(C) ஆசனம், பிராணயமம், தியானம்

(D) தாரணம், தியானம், சமாதி

59. மிமாம்சை தத்துவத்தின் படி, செயல்களுக்கான பலன்களை வழங்குவது

(A) கடவுள் (B) உயிர்

(C) அழல்வா (D) வேதம்

60. பிரபாகரரும் குமரிலரும் ஏற்றுக்கொண்ட வாழ்வின் இலட்சியமானது

(A) தர்மம்

(B) வேதம் பணிக்கும் கடமைகளை ஆற்றுவது

(C) விடுதலை

(D) சேவை

61. ரௌரவ ஆகமத்தின் விரிவாக்கமாக இருப்பது

(A) சிவப்பிரகாசம் (B) திரு அருட்பயன்

(C) சிவஞான போதம் (D) திருவாசகம்

62. எந்த ஒரு தேசிய திருவிழா பெண் தெய்வங்களுக்காக கொண்டாடப்படுகிறது?

(A) தீபாவளி (B) நவராத்திரி

(C) பொங்கல் (D) ஓணம்

63. விஷ்ணு அவதாரங்கள் ———— ஆகும்

(A) எட்டு (B) ஒன்பது

(C) பத்து (D) பதினொன்று

64. தசரா பண்டிகை ———— இரவுகள் கொண்டாடப்படுகின்றன

(A) 8 இரவுகள் (B) 9 இரவுகள்

(C) 10 இரவுகள் (D) 11 இரவுகள்

65. இந்து கோயில்கள் ———— இன் அடிப்படையிலேயே கட்டப்படுகின்றன

(A) ஆகமங்கள் (B) வேதங்கள்

(C) உபநிடதங்கள் (D) கீதை

66. சுச்சம லிங்கம்

(A) கொடிமரம் (B) கோபுரம்

(C) விமானம் (D) கலசம்

67. ஆகாய ஸ்தலம் ———— ஆகும்

(A) காளஷஸ்தி (B) திருவண்ணாமலை

(C) சிதம்பரம் (D) திருவாரூர்

68. கீழ்க்கண்ட பட்டியல்களைப் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடு

பட்டியல் I		பட்டியல் II
(a) முழங்கால்	1.	சண்டிகேசுவரர்
(b) வலது செவி	2.	நடராஜர்
(c) இடது செவி	3.	ஆஸ்தான மண்டபம்
(d) மார்பு	4.	தட்சணாமூர்த்தி

	(a)	(b)	(c)	(d)
(A)	3	4	1	2
(B)	4	2	1	3
(C)	2	3	4	1
(D)	1	4	3	2

69. வகைப்படுத்தப்பட்ட இந்திய நடனங்கள்

(A) தாண்டவா, லஸ்யா
(B) பாவ, நச
(C) நிரிட்டா, சிஸ்யாஸ்
(D) நாயகி, நாயகா

70. இதில் எது சடப் பொருள் கலாச்சாரம்?

(A) வேளாண்மை
(B) பொய்யான நம்பிக்கை
(C) கட்டுக்கதைகள்
(D) பாரம்பரியம்

71. இவற்றில் எந்த மூன்று கலாச்சாரத்தின் பரிமாணங்கள்?

(A) (i) ஏற்றுக் கொள்ளப்பட்ட அறக் கொள்கைகள்
(ii) இசை, கலை, இலக்கியம்
(iii) உலகை அர்த்தமுள்ளதாகச் சொல்லுதல்
(B) (i) நவீன மதிப்பு,
(ii) நவீன குடியரசு அரசியல்
(iii) சமயம்
(C) (i) கொள்கையில் ஏற்றத்தாழ்வு
(ii) அதிகாரப் பகிர்வு
(iii) கலாச்சார வேற்றுமை
(D) (i) சமூக ஒற்றுமை
(ii) பூரண உண்மை
(iii) சாதி பாதுகாப்பு

72. கோபுர தரிசனம் கடவுளது பாத தரிசனம் என்பதை எவ்வாறு அழைக்கிறோம்?

(A) பிரமாந்திர மத்ய கபாலத்வாரம்
(B) சேஷத்திரம் சரீரப்பிரஸ்தாரம்
(C) மூலப்பிரகிருதி
(D) மூல லிங்கம்

73. பின்வரும் தகவல்களில் தவறானதைச் சுட்டிக் காட்டுக

(A) ஒரு கோவில் எந்த மூர்த்திக்குரியதோ அந்த மூர்த்தியை அங்கு பிரதிட்டை செய்யப்படாதிருத்தல்
(B) அதன் நேராக அந்த மூர்த்திக்கு உரிய வாகனம் அல்லது ஊர்தியை அமைத்திருப்பர்
(C) அதன் பின் ஒரு பலி பீடத்தை அமைப்பர்
(D) ஆலயங்களில் கர்ப்ப கிரகம் முக்கியமானது

74. நமது முன்னோர்கள் ———————— கடவுள் தன்மையுடையவனவாகக் கருதி வழிபட்டு வந்தனர்

(A) கலைகளை (B) மரங்களை

(C) மலைகளை (D) மலர்களை

75. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் திரு ஆபரணங்கள் என அழைக்கப்படுபவை எவை

I. தலைப்பில்லை மற்றும் கொப்பு

II. காசுமாலை மற்றும் வங்கி

III. தலைச் சூடி மற்றும் மாலை

IV. மகரகண்டி மற்றும் மாலை

(A) I மற்றும் III (B) II மற்றும் IV

(C) III மற்றும் IV (D) I மற்றும் II

76. மாவட்ட குழுவில் உள்ள உறுப்பினர்களின் பதவிக்காலம்

(A) 7 வருடங்கள் (B) 5 வருடங்கள்

(C) 3 வருடங்கள் (D) 4 வருடங்கள்

77. கீழ்வருவனவற்றுள் சரியானதை தேர்வு செய்க

ஆணையர் பணிக்கு நியமனம்

1. நேரடி தேர்வின் மூலம் நியமிக்கப்படுகிறது

2. பதவி உயர்வின் மூலம் துணை ஆணையரை நியமிக்கலாம்

3. தமிழ்நாடு நீதித்துறை சார்ந்தவராக இருக்கலாம்

4. ஆசிரியராக இருக்கலாம்

(A) 1 மட்டும் சரி (B) 2 மற்றும் 3 சரி

(C) 1 மற்றும் 4 சரி (D) 1, 2, 3 சரி

78. இந்து மத நிறுவனங்கள் மற்றும் அறநிலைய சொத்துக்கள் கீழ் வராத சில சட்டங்கள்

(அ) மத அறநிலைய சொத்துக்கள் சட்டம், 1863

(ஆ) மத அறநிலைய சொத்துக்கள் சட்டம், 1867

(இ) தொண்டு அறநிலைய சொத்துக்கள் சட்டம், 1890

(ஈ) மத அறநிலைய சொத்துக்கள் சட்டம், 1875

(A) (அ) மற்றும் (இ) சரி (B) (அ) மற்றும் (ஆ) சரி

(C) (இ) மற்றும் (ஈ) சரி (D) (அ), (ஆ) மற்றும் (ஈ) சரி

79. தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையில் ஆணையர் பதவியில் உள்ளவர் ———— ஏற்றுக் கொண்டவராக இருக்க வேண்டும்.

(A) ஆத்திகச் சமயங்களை
(B) நாத்திகச் சமயங்களை
(C) இந்து சமயத்தை
(D) இவை அனைத்தும்

80. சமண சமய நிறுவனங்கள் மற்றும் பிற அறக்கட்டளைகள் தொடர்பான அறிவிப்பு எந்த விதிகளின் அடிப்படையில் வெளியிடப்படுகிறது.

(A) G.O. Ms. No.660
(B) G.O. Ms. No.661
(C) G.O. Ms. No.662
(D) G.O. Ms. No.663

81. கோயிலின் அறங்காவலர், ஒருங்கு சேர்க்கப்பட்ட பதிவேடுகளை எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை சமர்ப்பிக்க வேண்டும்?

(A) 3
(B) 6
(C) 10
(D) 12

82. தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறையின் அறங்காவலருக்கான தகுதி ———— ஆகும்.

(A) கடவுள் நம்பிக்கைக் கொண்டிருத்தல்
(B) நன்னடத்தை, புகழ், அறநிறுவனம் அமைந்துள்ள இடத்து மக்களது மரியாதை, செல்வாக்கு பெற்றிருத்தல்
(C) அறநிறுவன செயல்பாடுகளில் உட்படுத்திக் கொள்ள நேரத்தை ஒதுக்கியும், ஈடுபாடு கொண்டும் இருத்தல்
(D) இவை அனைத்தையும் கொண்டிருத்தல்

83. தமிழ்நாடு H.R & C.E. Act 1959-ன் படி சமய நிறுவனங்களை கட்டுப்படுத்தும் அதிகாரம் பெற்றவர்.

(A) இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர்
(B) இந்துசமய அறநிலையத்துறை ஆணையர்
(C) இந்துசமய அறநிலையத்துறை இயக்குநர்
(D) சமய நிறுவன அறங்காவலர்

84. சமய நிறுவனங்களின் வருமானத்தின் அடிப்படையிலான பட்டியல்களில் பொருந்தாதது எது?

(A) பத்தாயிரத்துக்குக் குறையாதது மற்றும் இரண்டு லட்சத்திற்கு குறைவானது
(B) இரண்டு லட்சத்திற்கு குறையாதது மற்றும் பத்து லட்சத்திற்கு குறைவானது
(C) பத்து லட்சத்திற்கு குறையாதது
(D) இருபது லட்சத்திற்கு குறையாதது

85. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் அறங்காவலருக்கு குறிப்பிடப்பட்டுள்ள தகுதி அல்லாததை தேர்ந்தெடு :

(A) கடவுள் நம்பிக்கை உடையவர்

(B) கோயில் அமைவிடத்தில் நன்னடத்தையைப் பெற்றவர்

(C) சமயப் பணிகளில் ஆர்வமுடையவர்

(D) கோயிலுக்கு அன்பளிப்புகளை வழங்குபவர்

86. கோயில்களின் வரவு-செலவு அறிக்கை சமர்ப்பித்தல் தொடர்பானவற்றுள் பொருந்தாதது எது?

(A) மடங்களின் வரவு-செலவு அறிக்கையை ஆணையருக்கு சமர்ப்பிக்க வேண்டும்

(B) பிரிவு 46-ல் உள்ளிட்ட நிறுவனங்களின் வரவு-செலவு அறிக்கையை இணை இயக்குநருக்கு சமர்ப்பிக்க வேண்டும்

(C) ஆதீனங்களின் வரவு-செலவு அறிக்கையை செயலருக்கு சமர்ப்பிக்க வேண்டும்

(D) பிற நிறுவனங்களின் வரவு-செலவு அறிக்கையை உதவி இயக்குநருக்கு சமர்ப்பிக்க வேண்டும்

87. கோயிலின் ஆண்டு வருமானம் பத்து லட்சத்திற்கும் அதிகமாயின் அதன் வருமான அறிக்கையை யாருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(A) இணை ஆணையர் (B) உதவி ஆணையர்

(C) துணை ஆணையர் (D) ஆணையர்

88. அன்னதானத் திட்ட நிதி எங்கிருந்து பெறப்படுகிறது?

(A) பொது மக்களின் பங்களிப்புகள்

(B) கோயில்களின் உபரி வருவாய்

(C) இந்து சமய அறநிலையத்துறை பொது நிதி

(D) இந்து சமய அறநிலையத்துறை நிர்வாக நிதி

89. கோயில்களில் வழங்கப்படுகின்ற பிரசாதங்களில் அல்லாதது எது?

(A) இலை மற்றும் பூ (B) விபூதி மற்றும் குங்குமம்

(C) துளசி மற்றும் வில்வம் (D) வெல்ல நீர் மற்றும் பால்

90. அறங்காவலருக்கு எதிராக ஆணையரால் பிறப்பிக்கப்படும் உத்தரவை எதிர்த்து அறங்காவலர் ———— முறையிடலாம்.

(A) முதலமைச்சரிடம் (B) துறை அமைச்சரிடம்

(C) நீதிமன்றத்தில் (D) செயல் அலுவலரிடத்தில்

91. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்ந்தெடு :

கூற்று (A) : அரசியல் சாசனச் சட்டம் ஒவ்வொரு மனிதனுக்கும் தாம் விரும்பும் சமயத்தை பின்பற்றும் உரிமையினை அளித்துள்ளது

காரணம் (R) : சமயம் மனித சமுதாயத்தை உயர்நிலை சிந்தனைக்கு கொண்டு செல்லும் சக்தி வாய்ந்த காரணி

(A) (A) மற்றும் (R) இரண்டும் சரி

(B) (A) மட்டும் சரி (R) தவறு

(C) (A) மற்றும் (R) சரி, (R), (A)-க்கு சரியான விளக்கம்

(D) (A) மற்றும் (R) சரி, (R), (A)-க்கு சரியான விளக்கமல்ல

92. கீழ்க்கண்ட வாக்கியங்களின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்ந்தெடு :

கூற்று (A) : இந்து சமயத்தைப் பின்பற்றாதவர் அறங்காவலருக்கான தகுதியை இழக்கிறார்.

காரணம் (R) : அறங்காவலர் சமய நம்பிக்கை உரியவராக இருத்தல் வேண்டும்.

(A) (A) சரி, (R)-தவறு

(B) (A) மற்றும் (R) சரி

(C) (A) மற்றும் (R) சரி, (R), (A)-க்கு சரியான விளக்கம்

(D) (A) மற்றும் (R) சரி, (R), (A)-க்கு சரியான விளக்கமல்ல

93. கீழ்க்கண்ட வாக்கியங்களை ஆராய்ந்து உரிய விடையைத் தேர்ந்தெடு :

கூற்று (A) : அறக்கட்டளையின் வருமானத்தை தேவையான வேறு செலவினத்திற்கும் பயன்படுத்தலாம்.

காரணம் (R) : அறக்கட்டளையின் நோக்கம் நிறைவடையவில்லை.

(A) (A)-சரி, (R)-தவறு

(B) (A) மற்றும் (R)-சரியானவை

(C) (A) மற்றும் (R) சரி, (R), (A)-க்கு சரியான விளக்கமல்ல

(D) (A) மற்றும் (R) சரி, (R), (A)-க்கு சரியான விளக்கம்

94. பதிவேடுகளை அளிக்கக் கோரும் அரசின் அதிகாரத்திற்கு பொருந்தாதது எது?

(A) வழக்குகள் தொடர்பான ஆவணங்கள்

(B) நடைமுறையை திருப்தி செய்து கொள்ளல்

(C) வழக்குகள் தொடர்பில்லாத ஆவணங்கள்

(D) நிதி தொடர்பல்லாத ஆவணங்கள் மட்டும்

95. கூற்று (A) : அறநிலையத்துறை ஆணையர் பிறப்பித்த ஆணையால் பாதிக்கப்பட்டவர் 90 நாட்களுக்குள் அரசுக்கு முறையீடு செய்யலாம்.

காரணம் (R) : முறையீடு பற்றிய குறிப்புகள் பிரிவு 36ல் உள்ளது.

(A) (A) மட்டும் சரி

(B) (R) மட்டும் சரி

(C) (A) மற்றும் (R) சரி, (R), (A)க்கு சரியான விளக்கமாகும்

(D) (A) மற்றும் (R) சரி, (R), (A)க்கு சரியான விளக்கமல்ல

96. உபரிநிதி பயன்பாடு கீழ்கண்டவற்றுள் எவற்றில் வருகிறது?

(A) பிரிவு 38 (B) பிரிவு 70

(C) பிரிவு 56 (D) பிரிவு 66

97. தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறையின் இணை ஆணையரால் பிறப்பிக்கப்படும் உத்தரவு பாதிக்கப்படுவதாகக் கருதும் நபர் 30 நாட்களுக்குள் ஆணையரிடம் ———————— கீழ் மேல்முறையீடு செய்யலாம்.

(A) தமிழ்நாடு சட்டம் II, 1927ன்

(B) தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்திய) சட்டம், 1967ன்

(C) தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்திய) சட்டம், 1968ன்

(D) பிரிவு 80ன்

98. தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறையின் சொத்துக்களை உரிய அனுமதியின்றி ஆக்கிரமிப்பு செய்பவர்களுக்கு ———————— சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

(A) ஒரு ஆண்டு முதல் 5 ஆண்டுகள் வரை

(B) 10 ஆண்டுகள் வரை

(C) 7 ஆண்டுகள் வரை

(D) மூன்று மாதங்கள் முதல் 5 ஆண்டுகள் வரை

99. முல்லை நிலத்தில் மிகுதியாகக் காணப்பெறும் பூ எது?

(A) காயாம் பூ (B) குறிஞ்சி பூ

(C) முல்லை பூ (D) பூவைப் பூ

100. சென்னை, மயிலாப்பூரில் அமைந்திருக்கும் ஸ்ரீராமகிருஷ்ண மடம் நிறுவப்பட்ட ஆண்டு

(A) 1897 (B) 1991

(C) 1800 (D) 1700

101. கீழே காணப்பெறுவனவற்றுள் சரியான கூறுகள் எவை?

I. வேதச் சிந்தனைகளை விட ஆகமச் சிந்தனைகள் தொன்மை மிக்கவை.

II. வேதச் சிந்தனை தமிழர்களுடையது.

III. ஆகமங்கள் தென்னாட்டில் தோன்றியவை.

IV. மகாபாரதத்தில் சிவாகமங்கள் குறிப்பிடவில்லை.

(A) I மற்றும் III சரியானவை (B) II மற்றும் III சரியானவை

(C) IV மற்றும் I சரியானவை (D) III மற்றும் IV சரியானவை

102. கீழே காண்பனவற்றில் சரியான கூற்று எது?

I. காபாலிகர் உடல் முழுவதும் திருநீறு பூசிக் கொள்வர்.

II. மண்டையோட்டில் உணவு கொள்ளும் பழக்கத்தினர்.

III. இவர்களை ஆதிசைவர் என்றழைப்பர்.

IV. சிவஞான போதத்தில் இவர்கள் இடம் பெற்றுள்ளனர்.

(A) I மற்றும் II சரியானது (B) II மற்றும் III சரியானது

(C) IV மற்றும் I சரியானது (D) II மற்றும் IV சரியானது

103. பிரஸ்தானத்திரயம் என்று வழங்கப்படும் நூல்

(A) வேதம், ஆகமம், உபநிடதம்

(B) திவ்யபிரபந்தம், உபயவேந்தம், அட்டாதச ரகசியங்கள்

(C) பகவத் கீதை, உபநிடதங்கள், பிரம்மசூத்திரம்

(D) அருத்த பஞ்சகம், ஸ்ரீவசனபூஷணம், வேதாந்தசாரம்

104. காரைக்கால் அம்மையாருக்கு கோவில் உள்ள வெளிநாடு எது?

(A) பர்மா, இந்தோனேசியா (B) சிங்கபூர், மலேசியா

(C) கம்போடியா, வட தாய்லாந்து (D) மொரிசியஸ், ஜவா

105. ஆதிநாதன் என்ற மாயமான பெயர் யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?

(A) முருகன் (B) பிரம்மன்

(C) சிவன் (D) அனுமான்

106. கீழே காணப்பெறுவனவற்றுள் சரியான கூற்றுகள் எவை?

I. கடல் கடந்தும் சிவாலயங்கள் உள்ளன.

II. திருவெம்பாவைப் பாடல்கள் தாய்லாந்தில் அரசு விழாக்களில் பாடும் பழக்கம் உள்ளது.

III. மலேயாவில் திருவெம்பாவை அரசு விழாவில் பாடும் பழக்கம் உள்ளது.

IV. மாணிக்கவாசகர் பாடியது திருவெம்பாவை.

(A) I, II மற்றும் III சரியானவை (B) IV, II மற்றும் III சரியானவை

(C) I மற்றும் II, IV சரியானவை (D) I, III, IV சரியானவை

107. இந்து மதத்தில் வேதங்களை அடுத்து தோன்றியது எது?

(A) சைவம் (B) ஆருன்யாஸ்

(C) உபநிடதங்கள் (D) மந்திரங்கள்

108. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் எவை சரியானவை?

I. ருத்ரன் ரிக் வேதத்தில் மிகத் தாழ்ந்த இடத்தை பெறுகிறான்.

II. ரிக் வேதம் கொடுமை நிறைந்தவனாகவே ருத்ரனைப் பேசுகிறது.

III. வாஜஸநேய ஸம்ஹிதை ருத்ரனை இழிவாக பேசுகிறது.

IV. யஜுர் வேதத்தின் சதருத்ரீயம் என்ற பெயரில் தைத்ரீய ஸம்ஹிதையில் ருத்ரன் போற்றப்படுகிறான்.

(A) I, III, IV சரியானவை (B) I, II, IV சரியானவை

(C) I, II, III, IV சரியானவை (D) III, II, I சரியானவை

109. பொருந்திய விடையைக் குறிப்பிடுக.

நமச்சிவாய வா அழ்க! நாதன் தாள் வாழ்க!

இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க என்பது

(A) திருவருட்பா (B) திருப்புகழ்

(C) திருவாசகம் (D) திருமந்திரம்

110. கீழே கொடுக்கப்பட்டுள்ள பாடலுக்கு பொருந்திய வரியை தேர்வு செய்க.

"அருந்தமிழ் ஆசான் வாதில் அமணைக் கழுநுதிமேல்
இருந்தமிழ் நாட்டை ஏற்றுவித்தேன்".

I. சமணர்கள் சைவர்களை வாதிட்டது
II. சமணர் கழுவேற்றம் பற்றியது
III. சைவர் கழுவேற்றம் பற்றியது
IV. திருநாவுக்கரசரை கழுவேற்றியது

(A) I மற்றும் II சரியானது
(B) II மற்றும் III சரியானது
(C) II மற்றும் IV சரியானது
(D) II மட்டும் சரியானது

111. அனிமா, மகிமா, லாகிமா, காரிமா, பிரகாமிய இசித்வா, வசித்வ, காமவாசயித்வ என்பவைகள் என அழைக்கப்படுகிறது.

(A) அஸ்ட சித்திகள்
(B) அஸ்ட திசைகள்
(C) அஸ்ட நட்சத்திரங்கள்
(D) அஸ்ட லக்ஷ்மி

112. "மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நிழலே"
என்ற செய்யுளைப் பாடியவர் யார்?

(A) மாணிக்கவாசகர்
(B) திருநாவுக்கரசர்
(C) திருமூலர்
(D) சுந்தரர்

113. ஒளியை அறியில் உருவும் ஒளியும்
ஒளியும் உருவம் அறியில் உருவாம்
ஒளியின் உருவம் அறியில் ஒளியே
ஒளியும் உருவு வுடனிருந்தானே
என்ற செய்யுளைப் பாடியவர் யார்?

(A) திருநாவுக்கரசர்
(B) இராமலிங்க அடிகளார்
(C) திருமூலர்
(D) சேக்கிழார்

114. ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின்
என்ற அடைமொழியால் குறிக்கப் பெறும் நூல்

(A) திருவாசகம்
(B) தேவாரம்
(C) திருமந்திரம்
(D) பெரியபுராணம்

115. சைவத்தில் புத்திர மார்க்கம் என்பது ———— ஆகும்.

(A) சரியை (B) கிரியை

(C) யோகம் (D) ஞானம்

116. தாச மார்க்கம் என சைவ சித்தாந்தம் கூறுவது ———— ஆகும்.

(A) சரியை (B) கிரியை

(C) யோகம் (D) ஞானம்

117. சைவ சித்தாந்தம் கூறும் மலங்கள் எத்தனை

(A) ஒன்று (B) இரண்டு

(C) மூன்று (D) நான்கு

118. "சிவஞான போதம்" என்ற நூலினை எழுதியவர் ———— ஆவார்.

(A) திருவந்தியார் (B) திருமூலர்

(C) மெய்கண்ட தேவர் (D) திருநாவுக்கரசர்

119. சைவ ஆகமங்கள் எத்தனை

(A) 105 (B) 106

(C) 107 (D) 108

120. அர்த்த பஞ்சகம் என்பதை கூறியது

(A) சைவம் (B) வைணவம்

(C) சமணம் (D) வேதம்

121. இந்து மதம் கூறும் கர்ம வினைகள் எத்தனை?

(A) ஒன்று (B) இரண்டு

(C) மூன்று (D) நான்கு

122. மோட்சத்தை அடைய சைவ சித்தாந்தம் கூறும் மார்க்கங்கள் எத்தனை?

(A) ஒன்று (B) இரண்டு

(C) மூன்று (D) நான்கு

123. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் எவை சரியற்றவை?

I. திருவிருத்தம் - நம்மாழ்வார்

II. பெரிய திருவந்தாதி - திருமங்கையாழ்வார்

III. திருவாசிரியம் - நம்மாழ்வார்

IV. சிறிய திருமடல் - பெரியாழ்வார்

(A) I, II சரியற்றவை (B) II, IV சரியற்றவை

(C) I, III சரியற்றவை (D) IV, I சரியற்றவை

124. தமிழரின் வழிபாட்டு முறையில் "வெறியாட்டு" எந்த தெய்வத்துடன் தொடர்பு கொண்டது?

(A) சிவன் (B) இந்திரன்

(C) முருகன் (D) வர்ணன்

125. பரஞ்சோதி முனிவர் விநாயகருக்கு வலது பக்கம் இடது பக்கம் எது பொழிகிறது என்று கூறுகிறார்?

(A) மோதகம், நிஜாநந்தம் (B) அன்பும், அறமும்

(C) அறக்கருணையும், மறக்கருணையும் (D) யானைத்தலை, தேவஉடல்

126. கீழ்க்காணும் கூற்றுகளில் பொருத்தமானதை தேர்வு செய்க.

(A) வேதம் 'ஆகமம்' என்ற சொல்லில் தோன்றியது

(B) வேதம் 'வித்' என்னும் வடமொழிச் சொல்லிலிருந்து தோன்றியது

(C) வேதம் 'தத்துவத்தில்' இருந்து தோன்றியது

(D) வேதம் 'பிரகிரதி' என்னும் வடமொழிச் சொல்லிலிருந்து தோன்றியது

127. சைவசித்தாந்த சாத்திரங்களில் ஞானத்தினை உணரும் முறையை எந்த சூத்திரம் கூறுகிறது?

(A) ஏழாம் சூத்திரம் (B) எட்டாம் சூத்திரம்

(C) பதினான்காம் சூத்திரம் (D) முதல் சூத்திரம்

128. குருவுக்கும் மாணவனுக்கும் சம்பாடனை முறையில் சைவசித்தாந்த கருத்துக்கள் எந்த சாத்திரத்தில் வெளியிடப்பட்டுள்ளது?

(A) இருபா இருபது (B) திருவருட்பயன்

(C) திருவுந்தியார் (D) சிவபிரகாசம்

129. திராவிட மகாபாடியம் என்று எந்த சாத்திரத்தை அழைப்பர்?

(A) சிவஞான சித்தியார் (B) சிவஞான போதம்

(C) திருவருட்பயன் (D) சிவபிரகாசம்

130. கீழ்க்கண்டவற்றுள் சாங்கியத்தைப் பற்றிய எந்தக் கோட்பாடுகள் சரியானவை?

I. சாங்கியம் குணங்களை ஏற்கிறது

II. சாங்கியம் வேதங்களை ஏற்கிறது

III. சாங்கியம் மறுபிறவியை ஏற்கிறது

IV. சாங்கியம் உலகப்பொருட்களை அறிவுடையதாக ஏற்கிறது

(A) I சரியானது

(B) I மற்றும் IV சரியானது

(C) I, II மற்றும் III சரியானது

(D) II மற்றும் IV சரியானது

131. இராமலிங்க சுவாமிகள் முருகக் கடவுளின் மறு அவதாரமாக யாரை கருதினார்?

(A) திருமூலர்

(B) திருஞானசம்பந்தர்

(C) திருநாவுக்கரசர்

(D) மாணிக்கவாசகர்

132. பொருத்துக :

(a)	இராமலிங்கர்	1.	துவைதம்
(b)	சங்கரர்	2.	விசிஷ்டாத்வைதம்
(c)	இராமானுஜர்	3.	அத்வைதம்
(d)	மத்வாச்சாரியார்	4.	சுத்த சன்மார்க்கம்

	(a)	(b)	(c)	(d)
(A)	1	2	3	4
(B)	4	3	2	1
(C)	3	2	1	4
(D)	2	3	4	1

133. இராமலிங்க அடிகளாரின் கூற்றுப்படி, இறை பக்தி, சக உயிரினங்களுக்கு சேவை, உயர்ந்த விளிப்புணர்வின் நுழைவு ஆகிய மூன்றும் சேர்ந்து ஒரு முக்கோணமாக இருப்பது தான்

(A) சுத்த மதம்

(B) சுத்த சமூகம்

(C) சுத்த சன்மார்க்கம்

(D) சுத்த அரசியல்

134. கீழ்க்காணும் கூற்றுக்களில் எவை சரியானவை?

I. இராமலிங்கர் சமரச சமயத்தைப் போதித்தார்.

II. அவர் உலக வழிக் கொள்கையை போதித்தார்.

III. ஜீவ காருண்யம் என்பது முழு உண்மையை அடையும் வழி என்றார்.

IV. அவர் யோகா பயிற்சியை வலியுறுத்தினார்.

(A) I சரியானவை

(B) II சரியானவை

(C) III சரியானவை

(D) I, II, III, IV அனைத்தும் சரியானவை

135. "உண்மை நிலை" என்பது சத்சித்தானந்தம் என்பதைக் கூறியவர் யார்?

(A) அரவிந்தர் (B) இராமானுஜர்

(C) மத்துவர் (D) சங்கரர்

136. அரபிந்தரின் தத்துவம் இணைக்கும் இரண்டு கொள்கைகள்

(A) பகுத்தறிவுக் கொள்கை, பட்டறிவுக் கொள்கை

(B) சடக் கொள்கை, ஆன்மீகக் கொள்கை

(C) புலன் கடந்த கொள்கை, சடக் கொள்கை

(D) பகுத்தறிவுக் கொள்கை, புலன் கடந்த கொள்கை

137. கீழ்க்காணும் இராமகிருஷ்ணர் கூற்றுக்களில் எவை சரியில்லாதவை?

I. பரம்பொருளின் காட்சி கிட்டியபொழுது வீடு, கதவு, கோவில் அனைத்துமே மறைந்து விட்டன.

II. எங்கும் எதுவுமே இருந்தது போல் தோன்றியது

III. எங்கும் ஒளி பரவி எல்லையற்று இருக்கக் கண்டேன்

IV. எங்கு நோக்கினாலும் ஒளிமயம்

(A) I சரியில்லாதவை (B) III சரியில்லாதவை

(C) II சரியில்லாதவை (D) IV சரியில்லாதவை

138. அணுவைப்போல சிறுத்து நிற்கும் ஆற்றல் பெற்ற சித்தியின் பெயர்

(A) வசித்வம் (B) கரிமா

(C) அணிமா (D) மகிமா

139. நான் யார் என்னும் ஞான விசாரமே மிகச் சிறந்த மார்க்கம் என்று கூறியவர்

(A) விவேகானந்தர் (B) ரமண மகரிஷி

(C) புத்தர் (D) ராமகிருஷ்ணர்

140. ஞான மார்க்கத்தை கிருகஸ்தர்களும் பின்பற்ற முடியும் என்று கூறியவர்

(A) சங்கரர் (B) மத்துவர்

(C) ஸ்ரீ ரமண மகரிஷி (D) திருமூலர்

141. இறைவன் மற்றுமின்றி உலகமும் உயிர்களும் உண்மை எனக் கருதியவர்கள்

(A) மத்துவர் மற்றும் சங்கரர் (B) இராமானுஜர் மற்றும் மத்துவர்

(C) சங்கரர் மற்றும் மாணிக்கவாசகர் (D) சங்கரர் மற்றும் இராமானுஜர்

142. கீழ்க்காணும் வாக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு சரியான விடையை கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளில் இருந்து தேர்வு செய்க :

கூற்று (A) : நான் இறப்பு அற்ற ஆன்மாவாக இருக்கிறேன் என்று இரமணர் கூறுகிறார்.

காரணம் (R) : இந்த உடம்பு இறக்கிறது ஆனால் ஆன்மா உடம்பை கடந்து செல்கிறது. இறப்பு ஒருபோதும் ஆன்மாவை தொட்டதில்லை.

(A) (A) மட்டும் சரி (R) தவறு

(B) (A) மற்றும் (R) இரண்டும் சரி (R), (A) உடைய சரியான விளக்கமாகும்

(C) (A) மற்றும் (R) இரண்டும் தவறு

(D) (A) மற்றும் (R) இரண்டும் சரி (R), (A) உடைய சரியான விளக்கமல்ல

143. கீழே தரபட்டுள்ளவற்றுள் எவை சரியானவை?

I. நான் யார் என்பதன் தேடல் "ஸ்ரவண".

II. நான் என்பதன் உறுதியான நிலையாக இருப்பது "மணண'.

III. ஒவ்வொரு காலத்திலும் பயிற்சி வேண்டுதலாக இருப்பது "தியாசன".

IV. நான் இருப்பதுவே சமாதி.

(A) I, II சரியானவை (B) II, III சரியானவை

(C) III, IV சரியானவை (D) I, II, III, IV சரியானவை

144. "குருவின் அருள் ஒரு சமுத்திரம் போல் இருக்கிறது" என்று கூறியவர் யார்?

(A) சித்தர்கள் (B) அரோபிந்தோ

(C) இரமண மகரிஷி (D) சங்கரர்

145. இரமணர் வெளிப்படையாக ஆதரித்த மார்க்கம்

(A) கர்ம மார்க்கம் (B) விச்சார மார்க்கம்

(C) பக்தி மார்க்கம் (D) ஞான மார்க்கம்

146. கீழ்க்காணும் வாக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு சரியான விடையை கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளில் இருந்து தேர்வு செய்க :

கூற்று (A) : அண்ட நாயகனாகிய சிவனார் தந்தை மட்டும் அல்லர் தாயும் ஆனவர் என்னும் பெயர் பெற்றார்.

காரணம் (R) : சிவபக்தி கொண்ட செட்டிப் பெண்ணுக்கு அவள் தாய் வந்து பிரசவம் பார்க்க வர முடியாததால் அவள் தாயின் வடிவத்தில் சிவபெருமான் வந்து பணிவிடை செய்தார்.

(A) (A) மட்டும் சரி (R) தவறு

(B) (A) மற்றும் (R) இரண்டும் சரி (R), (A) உடைய சரியான விளக்கமாகும்

(C) (A) மற்றும் (R) இரண்டும் தவறு

(D) (A) மற்றும் (R) இரண்டும் சரி (R), (A) உடைய சரியான விளக்கமல்ல

147. இந்தியாவின் தென் பகுதியிலிருந்து வந்த சித்தர்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறார்கள்?

(A) மகேஷ்வர சித்தர்கள் (B) ரச சித்தர்கள்

(C) சங்கட சித்தர்கள் (D) நாத சித்தர்கள்

148. கீழ்க்கண்ட குழுவில் யார் சேராதவர்?

(A) திருமூலர் (B) கரைச் சித்தர்

(C) பாம்பாட்டிச் சித்தர் (D) நாயன்மார்கள்

149. நாத சித்தர்கள் தோன்றியது எங்கு?

(A) தென் இந்தியா (B) வட இந்தியா

(C) கிழக்கிந்தியா (D) மேற்கிந்தியா

150. நியாய-வைசேஷகம் ஏற்றுக் கொள்ளும் காரண-காரிய வாதம் ———— எனப்படும்.

(A) ப்ரகிருதி பரிணாம வாதம் (B) பிரம்ம பரிணாம வாதம்

(C) விவர்த்த வாதம் (D) ஆரம்ப வாதம்

151. சாங்கியத் தத்துவத்தில் ப்ரதானம் என்ற சொல் குறிப்பது ———— ஆகும்.

(A) ப்ரக்ருதி (B) புருஷா

(C) அதிர்ஷ்டா (D) இவை அனைத்தும்

152. வைசேடிகத் தத்துவப் பிரிவைச் சார்ந்த பிரசாஸ்டபாதர் இயற்றிய நூலின் பெயர்

(A) தர்க்க சங்கரகம்

(B) பதார்த்த–தர்ம–சங்கரகம்

(C) பதார்த்த–அனுமான–பாஷ்யம்

(D) வேதாந்த சூத்திரம்

153. வைசேடிகத் தத்துவம் கூறும் மூன்று வகைக் காரணங்கள்

(A) நிமித்தகாரணம், முதல் காரணம், பயன் காரணம்

(B) முதன்மைக் காரணம், இரண்டாம் காரணம், இறுதிக் காரணம்

(C) சமவாயி காரணம், அசமவாயிகாரணம், நிமித்த காரணம்

(D) சம காரணம், திரிவிரித்காரணம், ஆதிகாரணம்

154. 'சர்வதர்ஷனசங்கர்கா' என்ற நூலினை இயற்றியவர்

(A) மத்துவர் (B) மாதவா

(C) இராதாகிருஷ்ணன் (D) சின்கா

155. 'நியாய–சூத்திரத்தில்' வாத முறைக்கு தேவையான பதினாறு பொருள்கள் இடம் பெறும் ———— சூத்திரம்.

(A) முதல் சூத்திரம் (B) ஐந்தாம் சூத்திரம்

(C) ஏழாம் சூத்திரம் (D) மூன்றாம் சூத்திரம்

156. தர்மகீர்த்தி ஏற்கும் நான்கு விதமான பிரதக்ஷய பிரமாணம்

(A) தர்ம, அர்த்த, காம மற்றும் மோக்ஷம்

(B) தொம்ஸபாவா, அன்னியோன்னியபாவ, பிரகபாவ, அத்துயந்தபாவ

(C) இந்துரிய விஞ்ஞானா, மனோவிஞ்ஞான, சுயசம்வேதனா மற்றும் யோக விஞ்ஞானம்

(D) நேர்காட்சி, மறுகாட்சி, சேய்மை காட்சி மற்றும் புறகாட்சி

157. 'அறிவு அதிகாரத்துவ மூலம்' என்பது

(A) சப்த பிரமானம் (B) அனுமான பிரமானம்

(C) உபமான பிரமானம் (D) பிரதக்ஷய பிரமானம்

158. நியாய தத்துவத்தின்படி 'ஸ்வரூப சம்பந்தா' என்பது

(A) ரூபத்திற்கும் அதன் அரூபத்திற்கும் உள்ள தொடர்பு

(B) அறிவுக்கும் அதன் ஆற்றலுக்குமுள்ள தொடர்பு

(C) அழகுக்கும் அதன் அறிவுக்குமுள்ள தொடர்பு

(D) அறிவுக்கும் அதன் பொருளுக்கும் உள்ள தொடர்பு

159. பரிணாம வாதத்தை ஏற்கும் தத்துவம் எது?

(A) அத்வைத வேதாந்தம் (B) சைவ சித்தாந்தம்

(C) நியாயம் (D) சாங்கியம்

160. சாங்கியத்தின் பரிணாமத்தில் முதல் தோன்றும் பொருள் எது?

(A) அகங்காரம் (B) ஆகாயம்

(C) மகத் (D) காலம்

161. பிரமானசாஸ்திரம் என்று அழைக்கப்படுவது எது?

(A) சாங்கியம் (B) பூர்வ–மிமாம்சை

(C) உத்திர–மிமாம்சை (D) நியாயம்

162. வைசேசிக தத்துவத்தின் படி குணங்களுக்கு அடிப்படையானது எது?

(A) கர்மம் (B) சமவாயம்

(C) திரவியம் (D) சாமானியம்

163. ஆத்திக தத்துவ முறைகள் ஏற்பது

(A) கடவுளின் இருப்பு (B) வேதங்களின் ஏற்புடமை

(C) உயிரின் அழியாத் தன்மை (D) கர்மக் கொள்கை

164. கோயில் கர்ப்பகிரகத்திற்கு மேல் உள்ள பகுதி

(A) பிரகாரம் (B) கலசம்

(C) விமானம் (D) கோபுரம்

165. இந்துமத கோயில்கள் ———— உருவ அமைப்பில் கட்டப்படுகின்றன.

(A) யானை (B) மனிதன்

(C) குதிரை (D) பசு

166. பூலோக வைகுண்டம் என அழைக்கப்படும் ஊர் யாது?

(A) காஞ்சிபுரம் (B) சிதம்பரம்

(C) தஞ்சாவூர் (D) ஸ்ரீரங்கம்

167. லிங்கம் ———— இன் அடையாளம் ஆகும்.

(A) முருகன் (B) விநாயகர்

(C) சிவன் (D) விஷ்ணு

168. ஆண்டுதோறும் விநாயக சதுர்த்தி திருவிழா ———— தமிழ் மாதத்தில் கொண்டாடப்படுகிறது.

(A) ஆனி (B) ஆடி

(C) ஆவணி (D) புரட்டாசி

169. கீழ்க்கண்ட பட்டியல்களைப் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடு

	பட்டியல் I		பட்டியல் II
(a)	சிவலிங்கம்	1.	வட்ட வடிவம்
(b)	இலிங்கத்தின் அடிப்பாகம்	2.	எட்டுக்கோணம்
(c)	இலிங்கத்தின் நடுப்பாகம்	3.	ரூபாரூபம்
(d)	இலிங்கத்தின் பாணம்	4.	நாற்கோணம்

	(a)	(b)	(c)	(d)
(A)	1	2	3	4
(B)	2	3	4	1
✓(C)	3	4	2	1
(D)	3	4	1	2

170. அழகுக் கலைகள் என்பது

(A) ஓவியக்கலை, நுண்கலை

✓(B) கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, காவியக்கலை

(C) இசைக்கலை, காவியக்கலை, சிற்பக்கலை

(D) ஓவியக்கலை, சிற்பக்கலை, கட்டிடக்கலை, நுண்கலை

171. இயலும் இசையும் கருத்தையோ, கதையையோ தழுவி வருவது

(A) இசைத் தமிழ் (B) முத்தமிழ்

✓(C) நாடகத் தமிழ் (D) சீரிசை வெண்பா

172. பண்டைய காலத்தில் கோவில்களில் விமானம் பழுதுபடாதபடி அவற்றின் மேல் எதை வேய்ந்தனர்?

(A) பஞ்சலோக தகடுகள் (B) வெண்கல தகடுகள்

✓(C) செப்பு தகடுகள் (D) குரோமியம் கலந்த தகடுகள்

173. கோயில்களில் இறைவனுக்கும் இறைவிக்கும் நடக்கும் திருக்கல்யாணம் திருவிழா நாட்களில் எத்தனாவது நாளில் நடைபெறும்?

✓(A) ஆறு அல்லது ஏழாவது நாட்களில் (B) ஐந்தாவது நாளில்

(C) மூன்றாவது நாளில் (D) ஏழாவது நாளில்

174. பொருத்துக :

கோயில் விமானத்தின் புறங்கள்		அமையப் பெற்ற தெய்வங்கள்
(a)	கீழ்ப்புறம்	1. தட்சிணாமூர்த்தி
(b)	மேல்புறம்	2. பிரமன்
(c)	வடபுறம்	3. விஷ்ணு
(d)	தென்புறம்	4. முருகன்

	(a)	(b)	(c)	(d)
(A)	1	2	3	4
(B)	2	3	4	1
(C)	4	3	2	1
(D)	3	4	1	2

175. இதில் எது சரியில்லாத இணை?

(A) வீபூதி தன்னை தரித்தவர்களுக்கு ஐசுவரியத்தைக் கொடுத்தலால் – பூதி

(B) இரட்சித்தலால் – இரட்சை

(C) சிவத்தை விளக்குவதால் – பஸ்மம்

(D) மலத்தைக் கழுவுவதால் – குட்சாரம்

176. சமயாச்சாரியர்களால் பாடப் பெற்ற தலங்களின் எண்ணிக்கை

(A) 274 (B) 200

(C) 150 (D) 100

177. "கற்றளி" என்பதன் சரியான பொருளை எழுதுக.

I. கற்கோயில் என்பது பொருள்

II. ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டப்படுவது

III. சுண்ணம் சேர்க்காமலே கட்டுவது

IV. நாடகக் கலையின் ஒரு பிரிவு

(A) IV சரியானது

(B) I, II, III சரியானது

(C) I மட்டும் சரியானது

(D) I, II, III, IV அனைத்தும் தவறானது

178. தமிழ்நாட்டிலுள்ள இந்து சமய அற நிறுவனங்களை நிர்வகிப்பதற்கும் ஆட்சி செய்வதற்கும் உருவாக்கப்பட்ட சட்டம் ———————— ஆகும்.

(A) தமிழ்நாடு கோவில் நுழைவு அங்கீகார சட்டம், 1947

(B) தமிழ்நாடு விலங்குகள் மற்றும் பறவைகள் பலியிடுவதை தடுக்கும் சட்டம், 1950

(C) தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம், 1959

(D) தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம், 2003

179. தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம், 1959 ன் விதிகளை சமண சமய அற நிறுவனங்களுக்கு நீட்டிக்க வேண்டுமெனில், நீட்டிற்பிக்கான அறிவிப்பு செய்வதற்கு முன் ————————ல் வெளியிட வேண்டும்.

(A) தமிழ்நாடு அரசிதழ்

(B) ஆங்கில நாளிதழ்

(C) வெளிநாட்டு நாளிதழ்

(D) இவையேதுமில்லை

180. தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம், 1959 ன் விதிகளை சமணசமயத்திற்கு நீட்டிப்பு செய்யும் பொழுது 'இந்து' என்ற சொல்லிற்கு ஈடாக '————————' என்ற சொல்லைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

(A) சாமான்ய

(B) சமண

(C) சமானமான

(D) சமயமான

181. தமிழகத்தில் இந்து சமய அற நிறுவனங்களில் ஏற்படும் நிர்வாக முறைகேடுகளை விசாரணை செய்யும் அதிகாரிக்கு ———————— உண்டான அதிகாரங்கள் உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டம், 1908-ன் படி வழங்கப்பட்டுள்ளன.

(A) உரிமையியல் நீதிமன்றத்திற்கு

(B) குற்றவியல் நீதிமன்றத்திற்கு

(C) பாராளுமன்றத்திற்கு

(D) சட்டப்பேரவைக்கு

182. தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் அறிவுரைக் குழுவின் துணைத் தலைவராக ———————— இருப்பார்.

(A) தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆணையர்

(B) தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் செயல் அலுவலர்

(C) தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் அமைச்சர்

(D) தமிழக முதல்வர்

183. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் சரியானவற்றைத் தேர்ந்தெடு :

I. கோயில்களில் அறங்காவலர் குழுக் கூட்டத்தை கோயில் நிர்வாக அதிகாரி அமைக்கின்றார்.

II. நிர்வாக அதிகாரி அனைத்து கூட்டங்களிலும் தவறாது பங்கேற்க வேண்டும்

III. நிர்வாக அதிகாரிக்கு ஓட்டுரிமை உண்டு

IV. அறங்காவலர் குழுத் தலைவர் இல்லாத நிலையில் நிர்வாக அதிகாரி தலைமை வகிப்பார்

(A) I மற்றும் IV (B) II மற்றும் IV

(C) III மற்றும் I (D) I மற்றும் II

184. அறங்காவலர் பதவி நியமனத்திற்கு உண்டான வயது வரம்பு.

(அ) 25 வயதிற்கு மேல்

(ஆ) 20 வயதிற்குள்

(இ) 18-20 வயதிற்குள்

(ஈ) 25 வயதிற்குள் உள்ள பரம்பரை அறங்காவலர்

(A) (அ) மட்டும் சரி (B) (அ) மற்றும் (ஈ) சரி

(C) (இ) மட்டும் சரி (D) (ஈ) மட்டும் சரி

185. அறநிலையச் சொத்துக்களான நிலம், கட்டிடம், நீர் நிலைகள் முதலானவை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதை அறிந்தால், உதவி இயக்குநர் யாருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும்?

(A) ஆணையர்

(B) இணை இயக்குநர்

(C) மாவட்ட ஆட்சித் தலைவர்

(D) மாவட்ட காவல் கண்காணிப்பாளர்

186. சமய நிறுவனங்கள் தமது வருவாயில் அரசுக்கு செலுத்த வேண்டிய தொகை

(A) 12 சதவீத வருவாய்

(B) 12 சதவீதத்திற்கு மிகாத வருவாய்

(C) 10 சதவீத வருவாய்

(D) 10 சதவீதத்திற்கு மிகாத வருவாய்

187. கோயில் பணியாளர் நியமன முறையில் பாதிக்கப்பட்டோர் ஒரு மாத காலத்திற்குள் அணுகவேண்டிய அலுவலகம் எது?

(A) இணை ஆணையர் அலுவலகம்

(B) அறங்காவலர் குழு தலைவர்

(C) உயர்நீதிமன்றம்

(D) மாவட்ட நீதிமன்றம்

188. சமய நிறுவனத்திற்கு ஏற்படும் வருமான இழப்பு, சட்டத்திற்குட்படாமல் செய்யப்பட்ட செலவு, பெறப்பட வேண்டிய வருமானத்தை வசூலிக்காமல் இருத்தல் போன்றவற்றை தணிக்கையாளர் தனது ———— தவறாமல் குறிப்பிட வேண்டும்.

(A) ஆண்டறிக்கையில்

(B) கையேட்டில்

(C) தணிக்கை அறிக்கையில்

(D) பேரேட்டில்

189. இந்து சமய நிறுவனத்தின் வரவு மற்றும் செலவினங்களுக்கான முறையான கணக்கினை ஆணையரின் அறிவுறுத்தலின்படி குறிப்பிட்ட படிவத்தில் ஒவ்வொரு ———— வைத்திருக்க வேண்டும்.

(A) காலாண்டிற்கும்

(B) அரையாண்டிற்கும்

(C) பசலி ஆண்டிற்கும்

(D) 9 மாதங்களுக்கும்

190. தமிழ்நாடு இந்து சமய அற நிறுவனங்கள் தங்களது வருவாயிலிருந்து ஒரு பகுதியை ———— ஆணையரிடம் செலுத்த வேண்டும்.

(A) வைப்புத் தொகையாக

(B) நிலுவைத் தொகையாக

(C) சேமிப்புத் தொகையாக

(D) ஆண்டு பங்களிப்பாக

191. இந்து சமய நிறுவனங்கள் தாமாக முன் வந்து தங்களது உபரி நிதியிலிருந்து பங்களிப்பாக தரப்பட்டு உருவாக்கப்படுவது

(A) இந்து சமய அறநிலையத்துறை பொதுநல நிதி

(B) இந்து சமய அறநிலையத்துறை உபரி நிதி

(C) இந்து சமய அறநிலையத்துறை நிவாரண நிதி

(D) இவையேதுமில்லை

192. மத நிறுவனங்களின் கணக்குகளை தணிக்கை செய்யும் தணிக்கையாளர்களின் தேர்வு வரும் பிரிவு

(A) இந்திய தண்டனை சட்ட தொகுப்பு பிரிவு 21

(B) இந்திய தண்டனை சட்ட தொகுப்பு பிரிவு 26

(C) இந்திய தண்டனை சட்ட தொகுப்பு பிரிவு 30

(D) இந்திய தண்டனை சட்ட தொகுப்பு பிரிவு 27

193. கீழ்காணும் வாக்கியங்களை அடிப்படையாக கொண்டு சரியான விடையை கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளில் இருந்து தேர்வு செய்க :

கூற்று (A) : அரசு சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, அறிக்கை வாயிலாக விதிகளை செய்திடலாம்

காரணம் (R) : பொதுத் தன்மைக்கு குந்தகமின்றி, அத்தகைய விதிகளை வகை செய்யலாம்

(A) (R) மட்டும் சரி, (A) தவறு

(B) (A) மட்டும் சரி, (R) தவறு

(C) (A) மற்றும் (R) இரண்டும் சரி, (R)- (A)க்கு உடைய சரியான விளக்கமாகும்

(D) (A) மற்றும் (R) இரண்டும் தவறு

194. தமிழ்நாட்டில் இந்து சமய அற நிறுவனங்களுக்குச் சொந்தமான எந்தவொரு சொத்தையோ, இடத்தையோ, நீர் நிலையையோ அத்து மீறி பயன்படுத்துவோர் ———————— எனப்படுவர்.

(A) உரிமம் பெற்றவர்

(B) குத்தகைதாரர்

(C) ஆக்கிரமிப்பாளர்

(D) உரிமம் பெறத் தவறியவர்

195. சமய நிறுவனத்திற்குச் சொந்தமான அதன் அருகில் அமைந்துள்ள இடத்தையோ, நிறுவனத்திலுள்ள பிரகாரத்தையோ, மண்டபத்தையோ, பக்தர்களின் வசதிக்காக அல்லாமல் வாடகைக்கு விடுவதற்கோ, அடமானம் வைப்பதற்கோ அறங்காவலருக்கு அதிகாரம்

(A) உள்ளது

(B) இல்லை

(C) தரப்பட வேண்டும்

(D) இவையேதுமில்லை

196. கோயிலில் ஒன்றுக்கு மேற்பட்ட அறங்காவலர்களும், நிர்வாக அதிகாரியும் இருக்கும் போது, கோயிலின் சொத்துக்கள் தொடர்பான ஆவணங்களை யார் பாதுகாப்பர்?

(A) அறங்காவலர் குழுத் தலைவர்

(B) அறங்காவலர் குழுத் தலைவர் மற்றும் நிர்வாக அதிகாரி கூட்டுப் பொறுப்பு

(C) பரம்பரை அறங்காவலர்

(D) அறங்காவலர் குழு உறுப்பினர் மற்றும் நிர்வாக அதிகாரி

197. ஒரு கோயிலில் நிர்வாக அதிகாரி பதவியில் இருக்கும் போது, கோயிலின் ஆபரணங்களும் விலை மதிப்புமிக்க பொருட்களும் யாருடைய பாதுகாப்பில் வைக்கப்படுகிறது?

(A) நிர்வாக அதிகாரி

(B) நிர்வாக அதிகாரி மற்றும் அறங்காவலரின் கூட்டு பொறுப்பு

(C) அறங்காவலர் குழுத் தலைவர்

(D) அறங்காவலர் குழுத் தலைவர் மற்றும் அறங்காவலர் கூட்டுப் பொறுப்பு

198. தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் பிரிவு 46ல் இடம்பெற்றுள்ள சமய நிறுவனங்கள் தங்களது வரவு செலவு திட்டத்தை ———————— சமர்ப்பிக்க வேண்டும்.

(A) ஆணையர் அல்லது கூடுதல் ஆணையரிடம்

(B) உதவி ஆணையரிடம்

(C) இணை ஆணையர் அல்லது துணை ஆணையரிடம்

(D) ஆணையரிடம்

199. ஒவ்வொரு ஆண்டின் மார்ச் இறுதிக்குள் அடுத்து வரும் ஆண்டிற்கான சாத்தியமான வரவு செலவு திட்டத்தினை, சமய நிறுவனத்தின் ———————— சமர்ப்பிக்க வேண்டும்.

(A) தலைவர் (B) மடாதிபதி

(C) அறங்காவலர் (D) கணக்கர்

200. நிர்வாக அதிகாரி கீழ்க்கண்ட எந்த அறங்காவலர் குழு தீர்மானத்தை செயல்படுத்த வேண்டியதில்லை?

(A) சட்டத்திற்குட்பட்டது

(B) அறங்காவலர் குழு அதிகாரத்திற்குட்பட்டது

(C) அமைதிக்கு குந்தகம் விளைவிக்காதது

(D) நிறுவனத்திற்கு நன்மையளிக்காதது

Sl. No. :

GR5AT/17

பதிவு எண்

2017

பொதுத் தமிழும் பொது அறிவும்

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 300

வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத் தொகுப்பு தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத் தொகுப்பு 200 வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும் இடையில் ஏதும் வெற்றுத்தாள்கள் உள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை பத்து நிமிடங்களுக்குள் அறைகண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத் தொகுப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு, முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்பட மாட்டாது.
3. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளை குறித்து காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு அறைக் கண்காணிப்பாளரால் தரப்படும்.
6. உங்களுடைய பதிவு எண், தேர்வுத்தாள் எண் மற்றும் வினாத்தொகுப்பு வரிசை எண் (Sl. No.) முதலியவற்றையும் விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அவைகளுக்காக அமைந்துள்ள இடங்களில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்ட விபரங்களை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் தேர்வாணைய அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடை வட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு விடை வட்டத்தில் மட்டும் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாகக் கருதப்படும். உதாரணமாக நீங்கள் (B) என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

(A) ● (C) (D)

9. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
10. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
11. 101 முதல் 200 வரையிலான வினாக்களில் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள்தான் முடிவானதாகும்.
12. வினாத் தொகுப்பில் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது.
13. மேற்கண்ட அறிவுரைகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

SEE BACKSIDE OF THIS BOOKLET FOR ENGLISH VERSION OF INSTRUCTIONS

1. 'உலகம்' என்னும் தமிழ்ச்சொல் எச்சொல்லின் அடியாய்ப் பிறந்தது?

(A) உலகு

(B) உலவு

(C) உலக

(D) உல

2. ஒழுக்கம் விழுப்பந் தரலான், ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்.

இக்குறளில் வரும் ஒழுக்கம் என்னும் சொல்லிற்கு சரியான இலக்கணக் குறிப்பைக் கண்டறிக.

(A) தொழிற்பெயர்

(B) முதனிலை திரிந்த தொழிற்பெயர்

(C) பண்புத்தொகை

(D) வினைத்தொகை

3. விடைக்கேற்ற சரியான வினாவைத் தேர்ந்தெடுத்து எழுதுக

"தாமே பாடுபட்டு உழைத்து முன்னேற வேண்டும் என்னும் உயர்ந்த எண்ணம் நம் இளைஞர்களிடையே வளர வேண்டும்"

(A) நம் இளைஞர்களிடையே எந்த எண்ணம் வளரக் கூடாது?

(B) நம் இளைஞர்களிடையே எந்த எண்ணம் வளர வேண்டும்?

(C) பெரியோர்களிடம் எந்த எண்ணம் வளர வேண்டும்?

(D) பெரியோர்களிடம் எந்த எண்ணம் வளரக் கூடாது?

4. ஒரே பொருள் தரும் பல சொற்கள் வருவது

(A) சொல் பின்வரு நிலையணி

(B) பொருள் பின்வரு நிலையணி

(C) சொற்பொருள் பின்வரு நிலையணி

(D) பிறிது மொழிதலணி

5. ஓர் எழுவாய் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டு முடிவது?

(A) தனிநிலைத் தொடர்

(B) கலவைத் தொடர்

(C) உணர்ச்சித் தொடர்

(D) செய்தித் தொடர்

6. பொருந்தாத இணையைக் கண்டறிக

(A) ஈண்டு – இவ்விடம்

(B) காண்டகு – காணத்தக்க

(C) இருப்பாணி – இரும்பு ஆணி

(D) கீண்டு – அடித்து

7. பிழையற்ற தொடரை எழுதுக

(A) புத்தகப் படிப்பு தேவை அத்தோடு பட்டறிவைச் சேர்த்து கொள்ளல் வேண்டும்

(B) புத்தகப் படிப்புத் தேவை அத்தோடு பட்டறிவைச் சேர்த்துக் கொள்ளல் வேண்டும்

(C) புத்தக படிப்பு தேவை அத்தோடு பட்டறிவை சேர்த்துக் கொள்ளல் வேண்டும்

(D) புத்தக படிப்பு தேவை அத்தோடு பட்டறிவைச் சேர்த்துக் கொள்ளல் வேண்டும்

8. பொருந்தாத வினை மரபினை எழுதுக

(A) சுவர் கட்டினான்

(B) அம்பு எய்தான்

(C) பால் பருகினான்

(D) ஆடை நெய்தான்

9. அகர வரிசையில் அமைந்துள்ள சொற்களைக் கண்டறிக

(A) அங்கை, அஞ்சு, அந்தி, அல்லல், அள்ளள்

(B) அஞ்சு, அல்லல், அந்தி, அங்கை, அள்ளள்

(C) அந்தி, அஞ்சு, அங்கை, அள்ளள், அல்லல்

(D) அல்லல், அள்ளள், அந்தி, அங்கை, அஞ்சு

10. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

சுவைப் பண்பு

(A) காரம்

(B) சதுரம்

(C) புளிப்பு

(D) இனிப்பு

11. உரிய பொருளைக் கண்டறிக.

"ஆ" – உணர்த்தும் பொருள் யாது?

(A) அருள்

(B) பசு

(C) நெருப்பு

(D) வனப்பு

12. பிறமொழிக் கலப்பற்றத் தொடரை எழுதுக

(A) நமஸ்காரம் என்று சாஷ்டாங்கமாக விழுந்தவனை வாழ்த்தினேன்

(B) நமஸ்காரம் என்று சாஷ்டாங்கமாக விழுந்தவனை ஆசீர்வதித்தேன்

(C) வணக்கம் என்று நெடுஞ்சாண்கிடையாக விழுந்தவனை வாழ்த்தினேன்

(D) வணக்கம் என்று நெடுஞ்சாண்கிடையாக விழுந்தவனை ஆசீர்வதித்தேன்

13. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

(A) நுனித்து → நுனி+த்+உ

(B) நுனித்து → நுனி+த்+ த்+உ

(C) நுனித்து → நுனித்து+ உ

(D) நுனித்து → நுனித்+த்+உ

14. கீழ்க்காணும் தொடர்களில் பிழையான தொடரைக் கண்டறிக

(A) பேருந்து நிறுத்துமிடத்தில் பள்ளிக்கூடம் இருக்கிறது

(B) இன்றும் நம் நாட்டில் பெருவாரியான் மக்கள் உள்ளார்களே

(C) ஆளமரத்தின் விளுதினைப் பாம்பென்று குறங்கு அஞ்சியது

(D) ஏரிகளில் மழைநீர் சேமித்தால் கிணறுகளில் நீர் வற்றாது

15. பொருந்தாததை கண்டறிக

(A) தான் + இன் = தன்னின்

(B) நீ + இன் = உன்னின்

(C) யான் + இன் = என்னின்

(D) நாம் + இன் = எங்களின்

16. ஓடு – என்பதன் வினையெச்சச் சொல்லைக் கண்டறிக

(A) ஓடி

(B) ஓடிய

(C) ஓடினான்

(D) ஓடுதல்

17. தொடர்நிலைச் செய்யுளும், தூய காப்பியங்களும் இயற்றுபவர்

(A) ஆசுகவி

(B) வித்தாரக் கவி

(C) மதுர கவி

(D) சித்திர கவி

18. கம்பரது காலம்

(A) கி.பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டு

(B) கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு

(C) கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு

(D) கி.பி. எட்டாம் நூற்றாண்டு

19. சொல்லிற்கு ஏற்ற பொருளை பொருத்தி எழுதுக :

(a)	ஆய காலை	1.	திரட்சி
(b)	திரள்	2.	வேடர்
(c)	எயினர்	3.	படகு
(d)	நாவாய்	4.	அந்த நேரத்தில்

	(a)	(b)	(c)	(d)
(A)	4	2	1	3
(B)	4	1	2	3
(C)	2	4	1	3
(D)	3	2	1	4

20. 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்'

– என வழங்கப்படும் நூல்

(A) கம்பராமாயணம்

(B) சிலப்பதிகாரம்

(C) பெரியபுராணம்

(D) மணிமேகலை

21. "தத்தும் பாய்புனல் முத்தம் அடைக்கும்
சாலை வாய்க்கன்னல் ஆலை உடைக்கும்"
இப்பாடல் வரிகள் இடம் பெற்றுள்ள இலக்கியம்

(A) கலிங்கத்துப் பரணி

(B) தமிழ் விடு தூது

(C) குற்றாலக் குறவஞ்சி

(D) முக்கூடற்பள்ளு

22. "முற் பிறப்பினை உணர்ந்தவளாகக்" குறிப்பிடப் படுபவள்

(A) கண்ணகி

(B) மணிமேகலை

(C) மாதவி

(D) மாதரி

23. உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியம்

(A) சீறாப்புராணம்

(B) பெரிய புராணம்

(C) கம்பராமாயணம்

(D) சிவ புராணம்

24. "நந்திக் கலம்பக" – நூலின் ஆசிரியர் யார்?

(A) கணிமேதாவியார்

(B) ஜெயங்கொண்டார்

(C) மூன்றாம் நந்திவர்மன்

(D) அறியப்படவில்லை

25. பொருள் விளங்குமாறு பிரித்து எழுதுக

(A) நீயடாவெதிர் நிற்பதோ

(B) நீய டாவெதிர் நிற்பதோ

(C) நீயடா வெதிர் நிற்பதோ

(D) நீ யடா வெதிர் நிற்பதோ

26. "அழகர் கிள்ளை விடு தூது" என்னும் சிற்றிலக்கியம் எத்தனை ஆண்டுகளுக்கு முந்திய நூல்

(A) 251 ஆண்டுகளுக்கு முந்திய நூல்

(B) 245 ஆண்டுகளுக்கு முந்திய நூல்

(C) 250 ஆண்டுகளுக்கு முந்திய நூல்

(D) 252 ஆண்டுகளுக்கு முந்திய நூல்

27. 'செரு அடுதோள்' என்ற அடைமொழி பெற்றவர்

(A) விளம்பிநாகனார்

(B) கபிலர்

(C) நல்லாதனார்

(D) பூதஞ்சேந்தனார்

28. "கற்றவர்க்கு எல்லா நாடுகளும் தம்முடைய நாடுகளே" – என்ற கருத்தமைந்த பாடலைப் பாடிய சங்கப்புலவர்

(A) கணியன் பூங்குன்றனார்

(B) முன்றுறை அரையனார்

(C) கணிமேதாவியார்

(D) திருவள்ளுவர்

29. "நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்

செல்வம் அன்றுதன் செய்வினைப் பயனே"

– இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல்

(A) புறநானூறு

(B) நற்றிணை

(C) ஏலாதி

(D) கலித்தொகை

30. ''கார்முகத் தசனி கூசக் கடுத்தவவ் வரக்கன் வென்ற
சீர்முகத் திளவல் பின்னர்த் திறத்ததன் னாம வேலாற்''
என்ற வரிகளை எழுதியவர் யார்?

(A) பாரதிதாசன்

(B) பாரதியார்

(C) வீரமாமுனிவர்

(D) ஒட்டக்கூத்தர்

31. தவறான தொடரை தேர்ந்தெடு

(A) சூலை நோயால் ஆட் கொள்ள பெற்றவர் –அப்பர்

(B) மணக்கோலத்தில் ஆட் கொள்ள பெற்றவர்– சுந்தரர்

(C) திருவெண்ணைய் நல்லூரில் ஆட் கொள்ளப் பெற்றவர் – சம்பந்தர்

(D) திருப்பெருந்துறையில் ஆட் கொள்ளப் பெற்றவர் – மாணிக்கவாசகர்

32. ''இரவினீர்ங் குழலும் அற்றோ என அஃதும் அற்றே என்னா
வெருவிலான் சலமே முற்றச் சாதித்தான் விளைவு நோக்கான்
இப்பாடல் வரிகள் இயற்றிய ஆசிரியர்

(A) பாரதியார்

(B) பரஞ்சோதி முனிவர்

(C) பெருஞ்சித்திரனார்

(D) காரியாசான்

33. குலசேகர ஆழ்வார் பாடிய பெருமாள் திருமொழி எந்த ஆயிரத்தில் உள்ளது

(A) முதலாம்

(B) இரண்டாம்

(C) மூன்றாம்

(D) ஐந்தாம்

34. ''திருவேங்கடத்தந்தாதி'' – என்னும் நூலின் ஆசிரியர்

(A) கம்பர்

(B) குமரகுருபரர்

(C) பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

(D) ஒட்டக்கூத்தர்

35. ''எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்

புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்''

இப்பாடல் வரிகள் இடம் பெற்றுள்ள இலக்கியத்தின் பெயர்

(A) மணிமேகலை

(B) வளையாபதி

(C) சிலப்பதிகாரம்

(D) குண்டலகேசி

36. ''வேலை தெரியாத தொழிலாளி, தன் கருவியின் மீது சீற்றம் கொண்டானாம்'' என்ற காந்தி குறிப்பிட்ட பழமொழி எம்மொழியைச் சார்ந்தது?

(A) தமிழ்மொழி

(B) பிரெஞ்ச் மொழி

(C) ஆங்கில மொழி

(D) குஜராத்திய மொழி

37. ''திருக்குறளை நாற்பதாண்டுகள் படித்துச் சுவைத்த சான்றோர்'' யார்?

(A) வீரமாமுனிவர்

(B) குணங்குடி மஸ்தான்

(C) பாரதியார்

(D) ஜி.யு. போப்

38. பொருத்தமான தொடரை தேர்வு செய்க.

வேலுநாச்சியார் என்பவர்

(A) சொக்கநாத நாயக்கரின் மனைவி

(B) ஆங்கிலேயரை எதிர்த்த முதல் தமிழகப் பெண்

(C) தென்னாட்டின் ஜான்சி இராணி

(D) தமது பதினாறாம் வயதில் மரணமடைந்தார்

39. "புளிய மரங்கள் அடர்ந்த பகுதி" – என்ற அடிப்படையில் பெயரிடப்படாத ஊர் எது?

(A) புளியங்குடி

(B) புளியஞ்சோலை

(C) புளிப்பேரி

(D) புளியம்பட்டி

40. "உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார்

உறவு கலவாமை வேண்டும்" என்று கூறியவர்

(A) திருமூலர்

(B) இராமலிங்கர்

(C) திரு.வி.க.

(D) திருவள்ளுவர்

41. கல்வெட்டுக்களில் காணப்படும் மதிரை இன்று ———————— ஆக மாறியுள்ளது.

(A) கோவை

(B) புதுவை

(C) மதுரை

(D) தில்லை

42. 'அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி' என்று கூறியவர்

(A) சேக்கிழார்

(B) திருவள்ளுவர்

(C) கம்பர்

(D) ஔவை

43. 'அரை நிருவாணப் பக்கிரி' என காந்தியடிகளை ஏளனம் செய்தவர்

(A) தால்சுதாய்

(B) ஸ்மட்ஸ்

(C) சர்ச்சில்

(D) அபுல்காசிம்

44. 'ஓருருக் கொருநாட்டுக் குரிய தான

ஓட்டைச் சாண் நினைப்புடையர் அல்லர்' – யார்?

(A) கவிமணி

(B) கண்ணதாசன்

(C) பாரதிதாசன்

(D) பாரதியார்

45. தமிழர்கள் ———————— நாட்டுடன் கடல் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்.

(A) ஆஸ்திரியா (B) கனடா

(C) போர்ச்சுக்கள் (D) சாவக நாடு

46. 'கீழார் வெளி' – கடல் ஆய்வில் கண்டெடுக்கப்பட்ட கட்டிட இடிபாடுகள் ———————— நூற்றாண்டை சார்ந்தவை.

(A) கி.மு. முதல் நூற்றாண்டு (B) கி.மு. இரண்டாம் நூற்றாண்டு

(C) கி.மு. மூன்றாம் நூற்றாண்டு (D) கி.மு. நான்காம் நூற்றாண்டு

47. தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்கள் மூலம் உலகத் தமிழரிடையே தமிழுணர்வை உருவாக்கப் பாடுபட்டவர் யார்?

(A) பாவலரேறு பெருஞ்சித்திரனார் (B) ஆலந்தூர் மோகனரங்கன்

(C) ஈரோடு தமிழன்பன் (D) அப்துல் ரகுமான்

48. பொருத்துக :

(a)	தேங்காய்த் துண்டுகள்	1.	நீல. பத்மநாபன்
(b)	மண்ணின் மகன்	2.	சுந்தர ராமசாமி
(c)	செங்கமலமும் ஒரு சோப்பும்	3.	சிவசங்கரி
(d)	விழிப்பு	4.	டாக்டர். மு.வ.

	(a)	(b)	(c)	(d)
(A)	4	1	2	3
(B)	2	4	3	1
(C)	3	1	4	2
(D)	1	3	2	4

49. ஓவியருக்கு, 'நோக்கினார் கண்ணிடத்தே

தம் தொழில் நிறுத்துவோர்'

என இலக்கணம் வகுத்தவர்

(A) நச்சினார்க்கினியர் (B) இளம்பூரணார்

(C) சேனாவரையர் (D) பரிமேலழகர்

50. சி.வை. தாமோதரனார் பரிதிமாற்கலைஞருக்கு வழங்கிய சிறப்புப்பட்டம் யாது?

(A) சித்திரக்கவி (B) ஞானபோதினி

(C) திராவிட சாஸ்திரி (D) ரூபாவதி

51. சரியான பகுதியை கண்டறிக

"கேட்டான்".

(A) கேட்டு

(B) கேள்

(C) கேடு

(D) கே

52. அடவி மலையாறு – இச்சொல்லில் உள்ள இலக்கணக் குறிப்பு யாது?

(A) பண்புத் தொகை

(B) உவமைத் தொகை

(C) உம்மைத் தொகை

(D) வினைத் தொகை

53. சரியான பொருளைக் கண்டறிக

"பருவரல்"

(A) குகை

(B) துன்பம்

(C) தூக்கம்

(D) இன்பம்

54. வழுவற்ற தொடரைத் தேர்வு செய்க

(A) வெற்றிலைத் தோப்புக்குச் சென்று வெற்றிலை பறித்து வா

(B) ஆந்தை கத்தியது

(C) வயலில் ஆட்டுக்குட்டி மேய்கிறது

(D) பெருமழை பெய்தமையால் மரங்கள் வீழ்ந்தது

55. 'தன்னொற்று இரட்டல்' எனும் விதிப்படி புணர்ந்த சொல் எது?

(A) கற்றாழை

(B) சிற்றோடை

(C) சேதாம்பல்

(D) பொற்றாளம்

56. ஆகு பெயர்களைப் பொருத்துக :

(a)	கருவியாகு பெயர்	1.	கம்பரைப் படித்தேன்
(b)	காரியவாகு பெயர்	2.	காளை வந்தான்
(c)	கருத்தாவாகு பெயர்	3.	திருக்குறள் கற்கிறேன்
(d)	உவமையாகு பெயர்	4.	வானொலி கேட்டு மகிழ்ந்தேன்

	(a)	(b)	(c)	(d)
(A)	4	3	1	2
(B)	4	2	3	1
(C)	3	1	2	4
(D)	4	3	2	1

57. பொருத்துக :

(a)	நெடு மதில்	1.	ஆறாம் வேற்றுமைத்தொகை
(b)	வாங்குவில்	2.	வினைத் தொகை
(c)	இலைவேல்	3.	பண்புத் தொகை
(d)	மாறன் கவிறு	4.	உவமைத் தொகை

	(a)	(b)	(c)	(d)
(A)	3	2	4	1
(B)	3	1	2	4
(C)	2	3	4	1
(D)	3	4	2	1

58. மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக

(A) ஆற்றுவார் பணிதல் அது சான்றோர் ஆற்றல்

(B) ஆற்றுவார் அது சான்றோர் பணிதல் ஆற்றல்

(C) ஆற்றுவார் ஆற்றல் அது சான்றோர் பணிதல்

(D) ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அது சான்றோர்

59. பொன்னும் துகிரும் முத்தும் இலக்கணக் குறிப்பு யாது?

(A) எண்ணும்மை

(B) உம்மைத் தொகை

(C) வினைத் தொகை

(D) உவமைத் தொகை

60. 'அந்தமான்' என்ற சொல் அந்த+மான் எனப் பிரிந்து நின்று எப்பொருளைத் தருகிறது

(A) விலங்கு

(B) நாடு

(C) அழகு

(D) உலகு

61. "பொறை எனப்படுவது போற்றார்ரைப் பொறுத்தல்" என்பதில் 'பொறை' என்ற சொல் குறிப்பிடும் பண்பு

(A) கோபம்

(B) அன்பு

(C) மகிழ்ச்சி

(D) பொறுமை

62. "நீண்ட வால்நிலம் புடைத்திடக்கிடந்துடல் நிமிர்ந்து"

–இதில் நிமிர்ந்து என்ற சொல்லின் எதிர்ச்சொல்லைக் கண்டறிக.

(A) உயர்ந்து

(B) குனிந்து

(C) பறந்து

(D) வளர்ந்து

63. பொருத்துக :

(a)	பொங்கு கடல்	1.	உருவகம்
(b)	அடைந்து	2.	இடவாகுபெயர்
(c)	கரகமலம்	3.	வினைத் தொகை
(d)	தேசம்	4.	வினையெச்சம்

	(a)	(b)	(c)	(d)
(A)	3	4	1	2
(B)	3	1	4	2
(C)	2	1	4	3
(D)	4	2	1	3

64. "தேன் போன்ற மொழி" இத்தொடரில் வரும் உவமை வகை.

(A) தொகையுவமை

(B) விரியுவமை

(C) வகையுவமை

(D) அழகுவமை

65. 'இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே'

—எனப் பாடியவர் யார்?

(A) பாரதியார்

(B) சுரதா

(C) பாரதிதாசன்

(D) கண்ணதாசன்

66. 'கதம்' என்ற சொல்லின் பொருள்

(A) சினம்

(B) சீதனம்

(C) இசை

(D) அளவு

67. "வதுவை" – என்ற சொல்லின் பொருள்

(A) திருமணம்

(B) மறுமணம்

(C) நறுமணம்

(D) மணம்

68. "கவரி வீசிய சேர மன்னன்"

(A) சேரன் கணைக்கால் இரும்பொறை

(B) பெருஞ்சேரலாதன்

(C) சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை

(D) ஆடுகோட்பாட்டு சேரலாதன்

69. இரட்சணிய யாத்திரிகம் – என்பதன் பொருள்

(A) இறைவனின் பயணம்

(B) இறைவனை நோக்கிச் செல்லும் பயணம்

(C) அடியார்களின் பயணம்

(D) கிறிஸ்துவத்தை நோக்கிய பயணம்

70. பொருந்தாதது எது?

(A) அயோத்தியா காண்டம்

(B) ஹிஜ்ரத்துக் காண்டம்

(C) பால காண்டம்

(D) கிட்கிந்தா காண்டம்

71. "வருகைப் பருவம்" என்பது பிள்ளைத் தமிழின் எத்தனையாவது பருவம்?

(A) முதல் பருவம்

(B) ஐந்தாம் பருவம்

(C) ஆறாவது பருவம்

(D) மூன்றாம் பருவம்

72. குமரகுருபரர் எழுதாத நூல் எது?

(A) கந்தர்கலி வெண்பா

(B) குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ்

(C) மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ்

(D) முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழ்

73. "பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ" எனச் சேக்கிழாரைப் புகழ்ந்துரைத்தவர்

(A) பாரதியார்

(B) பாரதிதாசன்

(C) திரு.வி.க.

(D) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்

74. "நற்றிணையைத்" தொகுப்பித்தவர்

(A) உக்கிரப் பெருவழுதி

(B) இளம் பெருவழுதி

(C) பன்னாடு தந்த மாறன் வழுதி

(D) மிளைகிழான் நல்வேட்டனார்

75. தமிழுக்குக் 'கதி' என்று பெரியோரால் போற்றப்படும் இரு நூல்கள்

(A) திருக்குறள், நாலடியார்

(B) திருக்குறள், கம்பராமாயணம்

(C) திருக்குற்ள், நான்மணிக்கடிகை

(D) திருக்குற்ள், சிலப்பதிகாரம்

76. "தலைவி தன் தலைவனோடு கொண்ட நட்பு நிலத்தைவிடப் பெரியது" – என்று கூறும் நூல்

(A) நற்றிணை

(B) குறுந்தொகை

(C) கலித்தொகை

(D) அகநானூறு

77. கம்பரால் 'பண்ணவன்' எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

(A) இராமன்

(B) இலக்குவன்

(C) குகன்

(D) பரதன்

78. பெருமாள் திருமொழியில் உள்ள பாசுரங்களின் எண்ணிக்கை எத்தனை?

(A) 205

(B) 305

(C) 105

(D) 405

79. "மதியிலி அரசர்நின் மலரடி பணிகிலர்

வானகம் ஆள்வாரே" – இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

(A) நற்றிணை

(B) அகநானூறு

(C) புறநானூறு

(D) நந்திக் கலம்பகம்

80. கம்பராமாயணம் – அயோத்தியா காண்டத்திலுள்ள படலங்கள்

(A) 14

(B) 10

(C) 11

(D) 13

81. இறையனார் எழுதிய களவியலுக்கு உரை கண்டவர்

(A) அகத்தியர்

(B) நக்கீரர்

(C) தொல்காப்பியர்

(D) பூதஞ்சேந்தனார்

82. "செம்புலப் பெயல் நீர் போல"

இவ்வரி இடம்பெறும் நூல்

(A) பரிபாடல்

(B) கலித்தொகை

(C) குறுந்தொகை

(D) அகநானூறு

83. சொல்லையும் பொருளையும் பொருத்துக :

(a)	வன்மை	1.	கொடை
(b)	வண்மை	2.	வலிமை
(c)	தண்மை	3.	இடப்பெயர்
(d)	தன்மை	4.	குளிர்ச்சி

	(a)	(b)	(c)	(d)
(A)	2	1	4	3
(B)	2	1	3	4
(C)	2	3	1	4
(D)	3	2	1	4

84. பழியில்லா மன்னன், யார் / எது போற்றும்படி வாழ்வான்?

(A) மக்கள்

(B) அமைச்சர்

(C) பிறநாட்டரசர்

(D) நூல்கள்

85. மாணிக்கவாசகர் அருளியவை

(A) தேவாரமும் திருவாசகமும்

(B) தேவாரமும் திருமந்திரமும்

(C) திருவாசகமும் திருக்கோவையாரும்

(D) திருவாசகமும் திருமந்திரமும்

86. பொருத்தமில்லாத தொடரை கண்டறிக.

பழந்தமிழ் நாட்டில் வாழ்ந்த தமிழர்கள்

(A) பொருள் தேடுவது ஒன்றையே குறிக்கோளாய் கொண்டிருந்தனர்

(B) அறத்தின் வழியே வாணிகம் செய்தனர்

(C) கொள்வது மிகை கொள்ளாதவர்கள்

(D) கொடுப்பதும் குறைபடாது கொடுத்தவர்கள்

87. கண்ணதாசனின் படைப்புகளில் 'சாகித்ய அகாடமி' பரிசு பெற்ற புதினம் எது?

(A) வேலங்குடித் திருவிழா

(B) ஆயிரம் தீவு அங்கயற்கண்ணி

(C) சேரமான் காதலி

(D) இராச தண்டனை

88. 'சாதி களையப்பட வேண்டிய களை' – எனக் கருதியவர்

(A) பெரியார்

(B) அம்பேத்கார்

(C) திருவள்ளுவர்

(D) காமராசர்

89. சரியான விடையை தேர்வு செய்க :

(a)	நாவல் பழம்	1.	மேத்தா
(b)	நந்தவன நாட்கள்	2.	நா. காமராசன்
(c)	நிலவுப் பூ	3.	ஈரோடு தமிழன்பன்
(d)	ஊமை வெயில்	4.	சிற்பி

	(a)	(b)	(c)	(d)
(A)	2	1	4	3
(B)	2	3	4	1
(C)	1	3	2	4
(D)	1	2	3	4

90. "தமிழ் மொழியின் உபநிடதம்" என சிறப்பிக்கப் பெறும் நூல்

(A) திருக்குறள்

(B) தாயுமானவர் பாடல்கள் திரட்டு

(C) கவிமணி பாடல்கள்

(D) திருமந்திரம்

91. பின்வருவனவற்றுள் 'கடலை' குறிக்காத சொல்

(A) ஆர்கலி

(B) முந்நீர்

(C) பௌவம்

(D) திமில்

92. மு.மேத்தா எழுதாத நூல் எது?

(A) கண்ணீர் பூக்கள்

(B) நடந்த நாடகம்

(C) ஊர்வலம்

(D) தண்ணீர் தேசம்

93. 1876, 2003 ஆகிய ஆண்டுகளில் ———— என்னுமிடத்தில் நடத்தப்பட்ட அகழாய்வில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

(A) திருவண்ணாமலை

(B) தருமபுரி

(C) ஆதிச்ச நல்லூர்

(D) கீழார் வெளி

94. கிழிசல் – சிறுகதை ஆசிரியர்

(A) ஜெயகாந்தன் (B) ராஜம் கிருஷ்ணன்

(C) வண்ணதாசன் (D) நாஞ்சில் நாடன்

95. 'நோய்க்கு மருந்து இலக்கியம்' எனக் கூறியவர்

(A) உ.வே. சாமிநாதர் (B) திரு.வி. கல்யாணசுந்தரனார்

(C) மீனாட்சி சுந்தரனார் (D) பரிதிமாற் கலைஞர்

96. 'பெற்றோரைக் குறிக்கும் அம்மை; அப்பன் என்னும் சொற்கள் எப்பகுதியைச் சார்ந்தது

(A) குட்ட நாடு

(B) பன்றி நாடு

(C) நாஞ்சில் நாடு

(D) அருவா நாடு

97. 'திரைக்கவித் திலகம்' என்றழைக்கப்படுபவர் யார்?

(A) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் (B) மருதகாசி

(C) உடுமலை நாராயணகவி (D) சுரதா

98. 'வேங்கடமகாவிங்கம்' என்ற இயற்பெயர் கொண்ட கவிஞர் யார்?

(A) ஞானக்கூத்தன் (B) கல்யாண்ஜி

(C) பசுவய்யா (D) பிச்சமூர்த்தி

99. மகாவித்துவான் நவநீதக்கிருட்டிண பாரதியாரின் மாணவர்

(A) பாரதிதாசன் (B) சச்சிதானந்தன்

(C) தமிழன்பன் (D) காமராசன்

100. அம்பேத்கர் மக்கள் கல்விக் கழகத்தைத் தோற்றுவித்த ஆண்டு

(A) 1948 (B) 1945

(C) 1946 (D) 1940

Sl. No. :

GR2AT/17

பதிவு எண்

2017

பொதுத் தமிழும் பொது அறிவும்
(Degree Standard)

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 300

வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத் தொகுப்பு தேர்வு தொடங்குவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னதாக விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.
